**கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை**

**கலைமாணி மூன்றாம் வருடப் பரீட்சை – 2018**

**(முதல் அரையாண்டுப் பருவ முடிவு)**

**ECN - 3158: பணக் கோட்பாடும் கொள்கையும்**

**காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள் மட்டும்**

**நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடைதருக**

---

1.

i. பணத்தை நீர் எவ்வாறு வரைவிலக்கணப் படுத்துவீர்? (04 புள்ளிகள்)

ii. பணம் எவ்வாறு தோற்றம் பெற்று தற்போதைய நிலையினை அடைந்தது என்பதை விளக்குக. (06 புள்ளிகள்)

iii. e - பணம் என்றால் என்ன? நவீன நாணய முறைமையொன்றில் e – பணத்தின் முக்கியத்துவத்தைப் பரிசீலிக்குக. (05 புள்ளிகள்)

2.

i. பழைமைவாத பணக்கேள்விக் கோட்பாட்டின் கூறுகளை விளக்குக. (05 புள்ளிகள்)

ii. கெயின்ஸிய பணக் கோட்பாட்டில் பணக் கேள்விக்கும் வட்டிவீதத்திற்கும் இடையிலான தொடர்பு எவ்வாறு விபரிக்கப்படுகிறதென்பதை விளக்குக. (05 புள்ளிகள்)

iii. பணவீக்கத்தின் போது மக்கள் பணத்திற்கான கேள்வியை அதிகரிப்பதேன்? (05 புள்ளிகள்)

3.

i. மத்திய வங்கியினால் பயன்படுத்தப்படும் பிரதான பணக்கொள்கைக் கருவிகளை விளக்குக. (06 புள்ளிகள்)

ii. இலங்கையிலிருந்து உதாரணங்களைப் பயன்படுத்தி விலையுறுதிப்பாட்டை அடைய எவ்வாறு பணக்கொள்கைக் கருவிகள் பிரயோகிக்கப்படுகின்றன என்பதை விளக்குக. (09 புள்ளிகள்)

4.

i. பணநிரம்பலை நிருணயிப்பன யாவை? (05 புள்ளிகள்)

ii. பின்வருந் தரவுகள் உமக்குத்தரப்படுவதாகக் கொள்க

தேவைப்படும் ஒதுக்குகள் (ரூபா) – 300 மில்லியன்
புழக்கத்திலுள்ள பணம் (C ) – ரூபா. 1500 மில்லியன்
கேள்வி வைப்புகள் (D) – ரூபா. 3000 மில்லியன்
மிகை ஒதுக்குகள் (ER) – ரூபா. 150 மில்லியன்

இப்பொருளாதாரத்தின் பணப் பெருக்கியைக் கணிப்பிடுக. அத்துடன் உயர்வலுப்பணம் 50 மில்லியனால் அதிகரிக்கப்படுமாயின் பொருளாதாரத்தின் பணநிரம்பலைக் கணிப்பிடுக. (10 புள்ளிகள்)

5. பின்வரும் நடவடிக்கைகள் பணநிரம்பலின் மீது ஏற்படுத்தும் விளைவுகளை விளக்குக.

i. மத்தியவங்கியானது ரூபா. 100,000 பெறுமதியான திறைசேரி உண்டியல்களை வங்கியல்லாத நிறுவனங்களுக்கு விற்பனை செய்கிறது.
ii. மத்தியவங்கியானது நியதி ஒதுக்குத் தேவையினை 12% இலிருந்து 10% ஆக குறைக்கிறது.
iii. வணிக வங்கிகள் தமது மிகை ஒதுக்குகளைக் குறைக்கின்றன.
iv. பொதுமக்கள் வணிகவங்கிகளிடமிருந்து பணத்தை மீளப் பெறுகின்றனர்.
v. மத்தியவங்கி தனது தயார்நிலைக் கடன்வசதி வட்டி வீதத்தினைச் (standing lending facility rate) குறைக்கிறது.

(ஒவ்வொன்றிற்கும் தலா 03 புள்ளிகள்)

6. i. பணக்கொள்கையின் இலக்கு மாறிகளைத் தெரிவு செய்வதில் கையாளப்படும் மூன்று தகுதி விதிகளைப் பற்றிக் கருத்துரைக்குக. (04 புள்ளிகள்)
ii. பணக்கொள்கை பற்றி நீர் கற்ற ஏதேனும் இரண்டு ஊடுகடத்தல் (transmission channels) வழிமுறைகளை விபரிக்குக. (05 புள்ளிகள்)
iii. கடந்த ஐந்து வருடங்களில் இலங்கையின் பணக்கொள்கையின் பயனுறுதித்தன்மை (effectiveness) பற்றி நுணுக்கமாகக் கருத்தரைக்குக. (06 புள்ளிகள்)

7. பின்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றினை (03)** விபரிக்குக.
i. திறைசேரி பிணையங்கள்
ii. குறுகிய பணநிரம்பல்
iii. எதிர்பார்க்கப்பட்ட பணவீக்க வீதம்
iv. மெய்வட்டி வீதம்
v. திரவத் தேர்வுக் கோட்பாட்டில் பரிமாற்றப் பணக்கேள்வி.
vi. நவீன பணக்கணியக் கோட்பாடு.

(ஒவ்வொன்றிற்கும் தலா 05 புள்ளிகள்)

*****